# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா.4(LW4)

| பெயர் | வெள்ளைச்சாமி | தொழில் | |
|---|---|---|---|
| தகப்பனார் பெயர் | ஆண்டி | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 12.06.2024 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். எதிரிகளை எனக்கு தெரியும். 2ஆம் எதிரி எனது தம்பி மகள் ஆகும். 1ஆம் எதிரியை கேள்விப்பட்டுள்ளேன். இறந்து போன சென்ராயன் எனது உடன் பிறந்த சகோதரியின் மகன் ஆவார். 10.03.2021ஆம் தேதி அதிகாலை சுமார் 5.30 மணியளவில் கருப்பையா எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சென்ராயன் இறந்துவிட்டதாக கூறினார். என்ன காரணம் என்று கேட்டதற்கு தூக்கு போட்டு இறந்ததாக கூறினார். உடனடியாக நான் சம்பவ இடத்திற்கு சென்ற நான் இறந்து போன சென்ராயன் குப்புற கீழே கிடந்தார். நான் பார்த்த போது மூக்கில் இரத்தம் வந்திருந்தது. தலையில் இரத்தக்காயம் இருந்தது. மேலே மின் விசிறியில் சேலை தொங்கியது, சென்ராயனின் கழுத்தில் சேலை சுற்றி இருந்தது. சென்ராயன் இறப்பிற்கு முன்பு 2 வருட காலமாக 2ஆம் எதிரிக்கும் இறந்து போன சென்ராயனுக்கும் இடையே 1ஆம் எதியுடன் கள்ளதொடர்பு வைத்து கொண்டு 2ஆம் எதிரி அடிக்கடி சென்றுவிடுவதாக பிரச்சனை இருந்து வந்தது. இது விசயமாக அவர்களது குடும்பத்திற்குள் பஞ்சாயத்து செய்தோம். நான் 2ஆம் எதிரிக்கும் இறந்து போன சென்ராயனுக்கும் இடையில் சமாதானம் செய்து வைத்தேன். 2ஆம் எதிரி இறந்து போன சென்ராயனுடன் விவாகரத்து செய்ய புகார் கொடுத்தார். அப்போது காவல் துறையினர் குழந்தைகளின் எதிர் காலம் கருதி இருவருக்கும் சமாதானம் செய்து வைத்தனர். சென்ராயன் இறந்தது சம்மந்தமாக அ.சா.1 நிலக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார், அப்போது நான் உடன் சென்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.3ம் நானும் புகார் கொடுக்க உடன் சென்றோம். நான் தற்போது நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை போலீசாரிடமும், அ.சா.1மும் கூறினேன் என்றால் சரிதான், இறந்த போன சென்ராயன் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 16 கி.மீ தூரம் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்ற போது வீட்டின் வெளில் சுமார் 50 முதல் 100 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். போலீசார் சுமார் 6.00 முதல் 6.15 மணியனவில் வந்தனர். அப்போது என்னை போலீசார் விசாரிக்கவில்லை. அதன் பின்னர் சென்ராயன் இறந்த மறுநாள் நானாக காவல் நிலையம் சென்றேன். அப்போது என்னை போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்போது நடந்த விபரங்கள் அனைத்தையும் கூறினேன். அதன் பின் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் வீட்டின் மேலே மற்றும் வீட்டை முழுவதும் சுற்றி பார்த்து பொருட்களை கைப்பற்றினார்களா என்றால் வீட்டை சுற்றி பார்த்து போட்டோ எடுத்தார்கள். வீட்டின் மாடியை சென்ற பார்த்தார்களா என்று தெரியாது. பொருட்களை கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. இறந்து போனவரது வீடும் காவல் நிலையமும் 2 கி,மீ தூரத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். யார் புகார் எழுதினார்கள் என்று தெரியாது. மொக்கராஜ் சொல்லிதான் எழுதினார். இறந்து போன சென்ராயன் என்பவருக்கும் செல்வி மற்றும் கண்மணி என்பவருக்கும் தொடர்பு இருந்தது என்றால் தெரியாது. கடன் பிரச்சனை இருந்த விபரம் எனக்கு தெரியாது. இறந்த பிறகு சுமார் 2 மாதம் அ.சா.1ன் வீட்டில் தான் 2ஆம் எதிரி இருந்தார் என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் 2ஆம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், அ.சா.1 எதிரிகளுக்கு எதிராக மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இறந்து போனவருக்கு கடன் மற்றும் கள்ளதொடர்பு பிரச்சனை இருந்தது என்றும் அது குறித்து எனக்கு தெரியும் என்றும் தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த போனவர் 1ஆம் எதிரியிடம் ரூ.5 லட்சம் வரை கடன் வாங்கி இருந்தார் என்றும், அதன் பின்னிட்டு இறந்தவரின் அப்பாவிடம் (அ,சா.1) கடனை திருப்ப கேட்டு பிரச்சனை செய்ததால் அந்த பிரச்சனையில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. 2ஆம் எதிரியிடமும் அ.சா.1 பணம் கேட்டு பிரச்சனை செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் அனைத்தும் தெரிந்தும் அ.சா.1 தெரிந்தவர் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. முதல் எதிரி இறந்து போனவர் வீட்டின் அருகில் குடியிருக்கிறார் என்று சொல்வது பொய் என்றும், அவர் தனது தோட்டத்து வீட்டில் குடியிருக்கிறார் என்றும் சொல்வது சரியல்ல. 2ஆம் எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சென்ராயனுக்கும் 2ஆம் எதிரிக்கும் இடையே பஞ்சாயத்து பேசியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும்,

இறந்து போன சென்ராயன் எனது தங்கை மகன் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 16:58:26 +0530

Additional District Judge,

Dindigul.